# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024
## வளர்தமிழ் 8

TEDC

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பாடலாலும் உரைநடையாலும் ஆக்கப்பட்டுள்ளவை

அ) இசைத்தமிழ் ☐ ஆ) இயற்றமிழ் ☐

இ) முத்தமிழ் ☐ ஈ) நாடகத்தமிழ் ☐

2. அஞ்சியெனப் பெயர் கொண்டபோதும் அஞ்சாது வாழ்ந்த மன்னன்

அ) பேகன் ☐ ஆ) கரிகாலன் ☐

இ) அதியர்மான் ☐ ஈ) பாரி ☐

3. காளமேகப்புலவர் ____________ நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

அ) இருபதாம் ☐ ஆ) பதின்மூன்றாம் ☐

இ) பத்தாம் ☐ ஈ) பதினைந்தாம் ☐

4. முத்துப்பல் என்ற உவமைஅணியின் உவமானம்

அ) முத்து ☐ ஆ) பல் ☐

இ) போன்ற ☐ ஈ) மென்மை ☐

5. மாலையில் நிலவு காலிப்பதைக் கண்டு மலர்வது

அ) அல்லி ☐ ஆ) செவ்வரத்தை ☐

இ) தாமரை ☐ ஈ) செவ்வந்தி ☐

TEDC

6. யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலை எழுதியவர்

அ) பாரதியார் ☐ ஆ) கல்லடிவேலுப்பிள்ளை ☐

இ) காளமேகப்புலவர் ☐ ஈ) பாவேந்தர் ☐

7. பொருக்குலர்ந்த வாயா! புலையா! திருக்குடந்தைக் கோட்டானே! இதில் கோட்டான் என்பது

அ) குரங்கு ☐ ஆ) நாய் ☐

இ) எருமை ☐ ஈ) ஆந்தை ☐

8. இலையின் புதிதாகத் தோன்றிய நிலையைச் சுட்டும் பெயர்

அ) சருகு ☐ ஆ) கொழுந்து ☐

இ) தளிர் ☐ ஈ) பழுப்பு ☐

9. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று

அ) எட்டுத்தொகை ☐ ஆ) பத்துப்பாட்டு ☐

இ) பரிபாடல் ☐ ஈ) திருக்குறள் ☐

10. பாலின் வெண்மை கொக்கு. இச்சொல்லியம் உணர்த்துவது

அ) எல்லைப்பொருள் ☐ ஆ) ஏதுப்பொருள் ☐

இ) ஒப்புப்பொருள் ☐ ஈ) நீங்கற்பொருள் ☐

11. தமிழில் ______________ வகைச் சிற்றிலக்கியங்கள் உள்ளன.

அ) 95 ☐ ஆ) 96 ☐

இ) 86 ☐ ஈ) 94 ☐

TEDC

12. தீம் என்பது

அ) குளிர்மை ☐ ஆ) தண்மை ☐

இ) இனிமை ☐ ஈ) வெம்மை ☐

13. சொல்லியத்தில் இடம்பெறும் எழுவாய், செயப்படுபொருள் என்பன

அ) பெயர்ச்சொற்கள் ☐ ஆ) வினைச்சொற்கள் ☐

இ) உரிச்சொற்கள் ☐ ஈ) இடைச்சொற்கள் ☐

14. இலங்கையின் வரலாற்றில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய தமிழீழத் தமிழ் மன்னன்

அ) கயிலைவன்னியன் ☐ ஆ) சங்கிலியன் ☐

இ) பண்டாரவன்னியன் ☐ ஈ) எல்லாளன் ☐

15. சுட்டுப்பொருளை உணர்த்தும் சொல்

அ) என்ன ☐ ஆ) யார் ☐

இ) எங்கே ☐ ஈ) அவன் ☐

16. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களில் ஒன்று

அ) மட்டக்களப்பு ☐ ஆ) முல்லைத்தீவு ☐

இ) மன்னார் ☐ ஈ) யாழ்ப்பாணம் ☐

17. '**செல்**' என்ற வினையடியை இறந்தகால வினைமுற்றாக மாற்றினால்

அ) செல்கிறான் ☐ ஆ) செல்வான் ☐

இ) சென்றான் ☐ ஈ) சென்ற ☐

18. உழவர் நெல்லை அறுவடை செய்தனர். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ) செய்தனர் ☐ ஆ) உழவர் ☐

இ) அறுவடை ☐ ஈ) நெல்லை ☐

TEDC

19. மூன்றாம் வேற்றுமை உருபு

அ) ஆல் ஆ) ஐ

இ) கு ஈ) இல்

20. ஏ,ஓ,உம்,தோறும் என்பன

அ) இடைச்சொற்கள் ஆ) உரிச்சொற்கள்

இ) வினைச்சொற்கள் ஈ) பெயர்ச்சொற்கள்

21. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி என்ற நூலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) திருத்தக்கதேவர்

இ) நாதகுத்தனார் ஈ) சீர்த்தலைச்சாத்தனார்

22. அவை + ஆல்

அ) அவையால் ஆ) அவற்றால்

இ) அதனால் ஈ) அதால்

23. தேடினர் என்ற சொல்லின் இடைநிலை

அ) வ் ஆ) இன்

இ) ன் ஈ) னர்

TEDC

24. ஆங்கிலப்படையின் பீரங்கிகள் ________________ கைப்பற்றப்பட்டன.

அ) இந்தியரால் ஆ) சிங்களவரால்

இ) ஒல்லாந்தரால் ஈ) வன்னியரால்

25. ங் ஞ் ண் ந் ம் ன் என்பன

அ) வல்லினமெய்கள் ☐ ஆ) மெல்லினமெய்கள் ☐

இ) இடையினமெய்கள் ☐ ஈ ) உயிர்மெய்கள் ☐

26. அறநெறி என்பதைப் பிரித்தால்

அ) அறம் + னெறி ☐ ஆ) அற + னெறி ☐

இ) அறம் + நெறி ☐ ஈ ) அற + நெறி ☐

27. அருளாண்மை வழியில் அறங்கேட்டு, சாகும்வரை உண்ணா நோன்பு இருந்தவர்

அ) மில்லர் ☐ ஆ) திலீபன் ☐

இ) விக்டர் ☐ ஈ ) சங்கர் ☐

28. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு எடுத்துக்காட்டு

அ) ஆடினான் ☐ ஆ) பாடினான் ☐

இ) எழுதினான் ☐ ஈ ) சிரித்தான் ☐

29. "அருமையாய்க் கிடைத்திட்ட இக்கனியுண்டால் ஆயுள் நீளுமென்று" அதியர்மானுக்குக் கூறியவர்

அ) துறவி ☐ ஆ) புலவர் ☐

இ) மன்னர் ☐ ஈ ) வீரர் ☐

TEDC

30. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வினாப்பொருளை உணர்த்தும் எழுத்து

அ) ஓ ☐ ஆ) ஏ ☐

இ) ஆ ☐ ஈ ) யா ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பழந்தமிழர் தாம் வாழ்ந்த நிலத்தை நான்காக வகுத்து வாழ்ந்தனர். நிலத்தின் இயற்கை அமைவு, காலநிலை என்பவற்றின் அடிப்படையில் அவை வகுக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டனர். குறிஞ்சியும் முல்லையும் வளங்குறைந்து தம் இயல்பு மாறும் பொழுது பாலை என்றொரு வரண்ட நிலம் தோன்றும். இந்நிலம் நீரின்றி வரண்டு இருப்பதால் கற்றாழை, நாகதாளி, முள்ளி போன்ற வரண்ட நிலச் செடிகளே இங்கு வளரும். இவ்வாறு பழந்தமிழர் இயற்கையின் இனிய இயல்புகளை நுணுகி ஆராய்ந்து நில இயல்புகளுக்கு ஏற்ப தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர்.

1. பாலைநிலம் எவ்வாறு தோன்றும்?

______________________________

______________________________

2. வரண்ட நிலச்செடிகள் இரண்டு தருக.

______________________________

______________________________

3. தாம் வாழ்ந்த நிலத்தை நான்காக வகுத்து வாழ்ந்தவர் யார்?

______________________________

______________________________

4. நிலத்தை எவற்றின் அடிப்படையில் வகுத்தனர்?

______________________________

______________________________

5. நானிலங்களையும் தருக.

______________________________

______________________________

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. அதியர்மான் நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்ததன் கரணியம் என்ன?

2. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழாவின் பெயர் என்ன?

3. சைவநெறி சார்ந்த இறையன்பு இலக்கியங்கள் இரண்டு தருக.

4. தொல்காப்பியம் யாரால் எழுதப்பட்டது?

5. காட்டுமல்லிகை எப்போது, எங்கே மலர்ந்தது?

6. விடிவெள்ளி எழும் திசை எது?

7. பண்டாரவன்னியன் கைப்பற்றிய கோட்டைகள் எவை?

புள்ளிகள் 10

TEDC

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# ஆசான்

| | | | | |
|---|---|---|---|---|
| காட்டிடுவார் | ஆசான் | அன்பும் | மணிபோல் | நிறைந்த |

எண்ணும் எழுத்தும் எமக்களிக்கும்
இறைவன் இங்கு அவரன்றோ!
பண்பும் ______________ போதித்துப்
பலரை வாழ்வில் உயர்த்திடுவார்!

ஒழுக்கம் ______________ குமுகாயம்
உலகில் என்றும் நிலைத்திருக்க
அழுத்தமான அறிவுரையால்
ஆசான் வழியைக் ______________

கண்ணின் ______________ மாணவரைக்
காக்கும் கருணைக் கடவுளவர்!
மண்ணில் ______________ மாண்புதனை
மனதில் வைத்துப் போற்றிடுவீர்!

TEDC

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

மாலைக்காட்சி மனதிற்கு இன்பம் தரும். கதிரவன் தனது விரிந்த ஒளிக்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு மறையும். அவ்வேளை கதிரவன் தங்கத்தகடுபோல் பளபள என மின்னும். அடிவானம் செக்கச்சிவந்து காணப்படும். இருள் எங்கும் மெல்லமெல்லப் பரவத்தொடங்கும். பறவைகள் கூட்டை நோக்கிப் பறந்து செல்லும். இக்காட்சியின் அழகே! அழகு

1. அடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________________________

2. பெயரெச்சம், வினையெச்சம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________________________

3. காணப்படும் என்ற வினைச்சொல்லின் பகுதியைத் தருக.

   ______________________________

4. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று தருக.

   ______________________________

5. தோன்றற் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________________________

புள்ளிகள் 10

TEDC

**ஆ) 1. பின்வரும் சொல்லியங்களில் உள்ள தோன்றா உறுப்புகளையும் சொற்களையும் எழுதுக.**

| | **தோன்றா உறுப்பு** | **சொல்** |
|---|---|---|
| 1.பெரியோரை மதிக்க வேண்டும். | | |
| 2.அறிவன் அழகாக செதுக்கினான். | | |

புள்ளிகள் 02

**2. தரப்பட்டுள்ள பெயர்ச்சொற்களுடன் விளிவேற்றுமையைப் புணர்த்தி எழுதுக.**

நண்பன் ____________________

தங்கை ____________________

மன்னன் ____________________

புள்ளிகள் 03

TEDC

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வளியில் | ஒலி | பணி | வழியில் | ஒளியில் | பனி |

அது ________________ காலத்தில் ஒரு நாள். மக்கள் ________________ முடித்துக் களைப்போடு வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் ________________ ஆவினங்கள் மங்கலான ________________ நின்று மேய்ந்து கொண்டிருந்தன. அப்போது உந்துகள் எழுப்பிய ________________ கேட்டு அவை அங்குமிங்கும் சிதறி ஓடின. பள்ளி முடிந்து வீடு திரும்பும் சிறுவர்கள் இதைக் கண்டு அச்சத்தில் குரல் எழுப்பினர்.

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

கோடைகாலத்தில் நீண்ட பள்ளி விடுமுறை விடப்படும். அக்காலத்தில் நாம் தாயகத்திற்கு விண்ணுந்தில் செல்வோம். அங்கே உறவினர், நண்பர்கள், அயலவருடன் பொழுதைக் கழிப்போம். எமக்குப் பிடித்த இடங்களைச் சுற்றிப் பார்ப்போம். புகைப்படங்கள் எடுப்போம். சுவையான உணவுகளை உண்டு மகிழ்வோம்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

TEDC

**8) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிறைவு செய்க.**

1. மனமுண்டானால் ____________________ .

2. குடிப்பது ____________________ கொப்பளிப்பது பன்னீர்.

3. இரக்கப் போனாலும் ____________________ ப் போ.

4. குற்றமுள்ள நெஞ்சு ____________________ .

5. பானையில் இருந்தால் தானே ____________________ வரும்.

புள்ளிகள் 05

TEDC

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- காட்டுமல்லிகை
- காளமேகப்புலவர்
- நூலகம்
- பள்ளி ஆண்டுவிழா

புள்ளிகள் 15

TEDC

TEDC